பேரூராட்சிக்குப் போதுமான குடிநீர் அத்துணை வார்டுகளிலும் முழுமையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு உண்டான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக திட்டம் வரைவு மதிப்பீடு செய்யப்பட்டு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் வைத்துள்ளார்கள். அதிலும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்ட மதிப்பீடு செய்து, அந்தப் பணிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 211, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

211—

குடிநீர்

***12525—திரு. இரா. தா. இன்பத்தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் குடிநீர் வாரியத் திட்டத்திற்காக 9 கோடியே 89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த தாயுள்ளம்கொண்ட தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 8]

கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் குடிநீர்த் திட்டப் பணி, ஒப்பந்தம் போடும் நிலையிலேயே உள்ளது. எவ்வித வேலையும் இதுவரை நடைபெறவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரையும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையும் நேரில் சந்தித்தேன். எந்தவிதப் பலனும் இல்லை. ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு ஏழை மக்களின் தாகத்தைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 262 கைபம்புகள் உள்ளன. இதன்மூலம் தினமும் 73 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. 48 சிறிய மின்விசைப் பம்புகளும் உள்ளன. இதில் தினமும் 34 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கின்றது. நகராட்சிப் பகுதியில் ஆறாயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட லாரி மூலமாகத் தினமும் மூன்று முறை, நான்கு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஏழு இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கைபம்புகள், விசைப்பம்புகள், குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கடுமையான வறட்சியைச் சமாளிக்க ரூ.20.50 இலட்சத்தில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூபாய் 9 கோடியே 89 இலட்சம் செலவில் 8 திறந்தவெளிக் கிணறுகளும், 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் அமைத்து 6 உறிஞ்சிக் கிணறுகள் மற்றும் 26.72 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செயலாக்க வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.*

முற்பகல் 10-55

தற்சமயம் பணி நடைபெறும் இடத்தில் புதிய கிணறுகள் அமைப்பதற்கு பொது மக்களுடைய ஆட்சேபனை உள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் உடனடியாக அந்த ஆட்சேபனை நிவர்த்தி செய்யப்பட்டால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசால் அனைத்து நடவடிக்கைகள் மூலமாக தொடர்ந்து நிலையான, உறுதியான முறையில் பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

திரு. இரா.தா. இன்பத் தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் என்னையும் இணைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கேள்வி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசு மூலமாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கிற அருப்புக்கோட்டை, விருதுநகர், சாத்தூர், சிவகாசி போன்ற நகரங்களில் எல்லாம் இந்த வறட்சியான நேரத்திலே அதிகமாகக் குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், பழைய திட்டங்களிலிருந்து சரியாகக் குடிநீர் கிடைக்கவில்லை. புதிய திட்டங்கள் ஆய்வு நிலையிலே இருந்து கொண்டு இப்போது நடவடிக்கை எடுபபதற்குத் தயாராக இருக்கின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் வேகமாக, விரைந்து செயல்படுத்துவார்களா என்பதையும், இப்போது இருக்கிற வறட்சியைத் தீர்வு செய்வதற்கு லாரிகள் மூலமாக இந்த நகரங்களுக்கெல்லாம் குடிநீர் வழங்கப்படுமா என்பதையும் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவித வறட்சிப் பணிகளையும் எதிர்கொள்ள தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அரசு இயந்திரத்தைத் தயார் நிலையில் வைக்கும் எண்ணத்தில் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமைகளை எதிர்கொள்ள, நகராட்சிப் பகுதிகளில் உள்ள வறட்சி நிலைமைகளை எதிர்கொள்ள கருத்துரு அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். தற்சமயம்

2003 ஏப்ரல் 8]

நகராட்சிப் பகுதிகளில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு நிறைவாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிற எண்ணத்தில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ரூ.15 கோடியே 16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நடைபெறுகிற எந்தத் திட்டப் பணிகளாக இருந்தாலும் சரி, உடனடியாக அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும், பொதுமக்களுக்கு நிறைவாக முழுமையான குடிநீர் வழங்க வேண்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உறுதியான உத்தரவு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 212, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

212—

கயிறு தொழிற்சாலை

***17234—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.